# பொது இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனநல குறைபாடுள்ள நபர்களை மருத்துவமனையில் சேர்த்தல்

(மன நலச் சட்டம் 1983ன் பிரிவு 136)

| | |
|---|---|
| 1. நோயாளியின் பெயர் | |
| 2. மருத்துவமனை மற்றும் வார்டின் பெயர் | |

## நான் ஏன் மருத்துவமனையில் இருக்கிறேன்?

உங்களுக்கு மனநல குறைபாடு இருக்கலாம் மற்றும் ஒரு மனநல மருத்துவ நிபணரால் நீங்கள் பார்க்கப்பட வேண்டும் என்ற கவலை காரணமாக காவல்துறை அதிகாரி ஒருவரால் நீங்கள் இந்த மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறீர்கள்.

உங்களுக்கு சிகிச்சை தேவையா என்பதை அறியும் பொருட்டு உங்களை மதிப்பீடு செய்வதற்கு ஏதுவாக, மன நலச் சட்டம் 1983ன் பிரிவு 136ன் கீழ் நீங்கள் இங்கே வைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

## நான் இங்கு எவ்வளவு காலம் இருப்பேன்?

ஒரு மருத்துவராலும், ஓர் ஒப்புதலளிக்கப்பட்ட மனநல நிபுணராலும் பார்க்கப்படுவதற்கு ஏதுவாக 72 மணி நேரம் வரை நீங்கள் இங்கே (அல்லது நீங்கள் பாதுகாப்பாக இருக்கக்கூடிய வேறொரு இடத்தில்) வைககப்படலாம்.

ஒப்புதலளிக்கப்பட்ட மனநல நிபுணர் என்பவர், குறிப்பிட்ட நபர்களை மருத்துவமனையில் வைத்திருக்க வேண்டுமா என்பதை முடிவு செய்வதற்கு உதவுவதற்காக சிறப்புப் பயிற்சி பெற்ற ஒரு நபராவார்.

நீங்கள் அவசியம் மருத்துவமனையில் இருக்க வேண்டும் என்று மருத்துவர் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட மனநல நிபுணர் ஒப்புக் கொண்டார்களானால், அவர்களது முடிவை உறுதி செய்வதற்காக இரண்டாவது மருத்துவர் ஒருவரும் உங்களைப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவார்.

நீங்கள் செல்லலாம் என்று கூறப்பட்டாலன்றி, இக்காலகட்டத்தில் நீங்கள் மருத்துவமனையைவிட்டு வெளியேறக்கூடாது. நீங்கள் வெளியேற முயற்சித்தால், பணியாளர்களால் உங்களைத் தடுத்து நிறுத்த முடியும், மற்றும் நீங்கள் வெளியேறினால், நீங்கள் திரும்பவும் கொண்டுவரப்படலாம்.

72 மணி நேரம் முடிவடையும்போது உங்களை மருத்துவர்களோ அல்லது ஒப்புதலளிக்கப்பட்ட மனநல நிபுணரோ பார்த்திராவிட்டால், நீங்கள் தாராளமாகச் சென்றுவிடலாம். சுய விருப்பத்தின் பேரில் நீங்கள் மருத்துவமனையிலேயே தங்கியிருக்க முடிவு செய்யலாம். 72 மணி நேர முடிவில் நீங்கள் வெளியேற விரும்பினால், தயவுசெய்து முதலில் பணியாளர் ஒருவரிடம் பேசவும்.

உங்கள் விஷயத்தில் 72 மணி நேரம் முடிவடையும் சமயம்:

| தேதி | நேரம் |
|---|---|
| | |

## அடுத்ததாக என்ன நடக்கும்?

மருத்துவர்கள் மற்றும் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட மனநல நிபுணர் உங்களைப் பார்த்த பிறகு, இன்னும் சிறிது காலத்திற்கு நீங்கள் மருத்துவமனையிலேயே தங்கியிருக்க வேண்டும் என்று அவர்கள் கூறலாம். அது ஏன் மற்றும் எவ்வளவு காலத்திற்கு இருக்கும் என்பதை அவர்கள் உங்களுக்குக் கூறுவார்கள். என்ன நடக்கும் என்பதை உங்களுக்கு விளக்கிக்கூறும் இன்னொரு சிற்றேடு உங்களுக்கு அளிக்கப்படும்.

நீங்கள் தங்க வேண்டிய அவசியமில்லை என்று அவர்கள் முடிவு செய்தால், நீங்கள் வேறு என்ன உதவி பெற வேண்டும் என்பது குறித்து யாராவது ஒருவர் உங்களுடன் பேசுவார்.

## என்னால் மேல் முறையீடு செய்ய முடியுமா?

முடியாது. நீங்கள் மருத்துவமனையில் தங்கியிருக்க ஆவண்டும் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், பிரிவு 136ன் கீழ் உங்களை இங்கு வைத்திருப்பதற்காக எடுக்கப்பட்ட முடிவுக்கு எதிராக உங்களால் மேல்முறையீடு செய்ய முடியாது.

## எனக்கு சிகிச்சை அளிக்கப்படுமா?

உங்களுக்கு தேவைப்படும் என்று தாங்கள் கருதும் எந்தவொரு சிகிச்சை பற்றியும் மருத்துவமனை பணியாளர்கள் உங்களுக்குக் கூறுவார்கள். உங்களுக்கு விருப்பமில்லாத எந்த சிகிச்சையையும் மறுப்பதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது. உங்களுக்கு விளக்கிக் கூறப்படும் பிரத்யேக சூழ்நிலைகளில் மட்டும், நீங்கள் ஒப்புக்கொள்ளாத சிகிச்சை உங்களுக்கு அளிக்கப்படலாம்.

## உங்கள் நெருங்கிய உறவினருக்குத் தெரிவித்தல்

உங்கள் நெருங்கிய உறவினருக்கு இச்சிற்றேட்டின் பிரதி ஒன்று அளிக்கப்பட வேண்டும் என்று மன நலச் சட்டம் கூறுகிறது.

உங்கள் நெருங்கிய உறவினராகக் கருதப்படும் நபர்களின் பட்டியல் ஒன்று மன நலச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளது. பொதுவாக, அந்தப் பட்டியலில் மிக உயர்ந்த இடத்திலுள்ள நபரே உங்கள் மிக நெருங்கிய உறவினராகக் கருதப்படுவார். இதனையும், உங்கள் பராமரிப்பு மற்றும் சிகிச்சை தொடர்பாக உங்களள் நெருங்கிய உறவினருக்கு என்ன உரிமைகள் உள்ளன என்பதையும் விளக்கும் சிற்றேடு ஒன்றை மருத்துவமனை பணியாளர்களால் உங்களுக்கு அளிக்க முடியும்.

உங்கள் விஷயத்தில், எங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ள உங்கள் நெருங்கிய உறவினர்:

| |
|---|
| |

இந்நபர் சிற்றேட்டின் பிரதி ஒன்றைப் பெறுவதை நீங்கள் விரும்பவில்லை என்றால், தயவுசெய்து உங்கள் செவிலியர் அல்லது வேறொரு பணியாளரிடம் கூறவும்.

## உங்கள் நெருங்கிய உறவினரை மாற்றிக் கொள்ளுதல்

உங்கள் நெருங்கிய உறவினராக இருப்பதற்கு இக்குறிப்பிட்ட நபர் பொருத்தமானவராக இல்லை என்று நீங்கள் நினைத்தால், அவருக்கு பதிலாக வேறொருவர் உங்கள் நெருங்கிய உறவினராகக் கருதப்பட வேண்டும் என்று கேட்டு நீங்கள் கவுன்டி நீதிமன்றத்திற்கு மனு செய்யலாம். இதனை விளக்கும் சிற்றேடு ஒன்றை மருத்துவமனை பணியாளர்களால் உங்களுக்கு அளிக்க முடியும்.

## உங்கள் கடிதங்கள்

நீங்கள் மருத்துவமனையிலிருக்கும்போது உங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் அனைத்தும் உங்களிடம் கொடுக்கப்படும். உங்களிடமிருந்து தாங்கள் கடிதம் எதுவும் பெற விரும்பவில்லை என்று கூறும் நபர்களைத் தவிர மற்றவர்கள் எவருக்கும் நீங்கள் கடிதங்களை அனுப்பலாம். இந்நபர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் மருத்துவமனை பணியாளர்களால் தடுத்து நிறுத்தப்படக்கூடும்.

## நடைமுறைக்கான நெறி

மன நலச் சட்டம் பற்றியும், மனநல குறைபாடுள்ள நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தல் பற்றியும் மருத்துவமனையில் உள்ள பணியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கும் நடைமுறைக்கான நெறி ஒன்று உள்ளது. உங்கள் பராமரிப்பு குறித்த முடிவுகளை எடுக்கும்போது, இந்நெறி என்ன சொல்கிறது என்பதை பணியாளர் கவனத்தில் கொள்ள வேண்டும். நீங்கள் விரும்பினால், இந்நெறியின் பிரதி ஒன்றை பார்ப்பதற்காக கேட்டுப் பெறலாம்.

## நான் எவ்வாறு புகார் அளிக்க வேண்டும்?

மருத்துவமனையில் உங்களுக்கு அளிக்கப்படும் பராமரிப்பு மற்றும் சிகிச்சை தொடர்பாக எதைப் பற்றியேனும் நீங்கள் புகார் அளிக்க விரும்பினால், தயவுசெய்து பணியாளர் ஒருவரிடம் பேசவும். அவர்கள் பிரச்னையைத் தீர்க்க உதவக்கூடும். மருத்துவமனையின் புகார் அளிக்கும் நடைமுறை குறித்தும் அவர்கள் விவரம் அளிக்கக்கூடும், உள் தீர்வு என்றழைக்கப்படும் நடைமுறையின் மூலம் உங்கள் புகாருக்கான தீர்வைப் பெறுவதற்கு அதனை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் புகார் அளிப்பதற்கு உதவக்கூடிய யாரேனும் மற்ற நபர்கள் பற்றியும் அவர்களால் உங்களுக்குக் கூறமுடியும்.

மருத்துவமனையின் புகார் நடைமுறைகள் உங்களுக்கு உதவக்கூடும் என்று நீங்கள் கருதாவிட்டால், நீங்கள் ஒரு தனி கமிஷனிடம் முறையிடலாம். இந்தக் கமிஷன், மன நலச் சட்டம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதையும், அது சரியான முறையில் அமல்படுத்தப்படுகிறதா மற்றும் மருத்துவமனையில் இருக்கும் காலத்தில் நோயாளிகள் நல்ல முறையில் பராமரிக்கப்படுகிறார்களா என்பதையும் கண்காணிக்கிறது. இக்கமிஷனை எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை விளக்கும் ஒரு சிற்றேட்டை மருத்துவமனை பணியாளர்கள் உங்களுக்கு அளிப்பார்கள்.

## மேற்கொண்டு உதவி மற்றும் தகவல்

உங்கள் பராமரிப்பு மற்றும் சிகிச்சை குறித்து நீங்கள் புரிந்து கொள்ளாதவை ஏதேனும் இருப்பின், பணியாளர்களில் ஒருவர் உங்களுக்கு உதவும் முயற்சியை மேற்கொள்வார். நீங்கள் புரிந்துகொள்ளாத ஏதேனும் ஒன்று இந்த சிற்றேட்டில் இருந்தாலோ அல்லது இந்த சிற்றேடு விடை தராத மற்ற ஏதேனும் கேள்விகள் உங்களுக்கு இருந்தாலோ, தயவுசெய்து பணியாளர் ஒருவரைக் கேட்டு விளக்கம் பெறவும்.

யாருக்காவது கொடுப்பதற்காக இச்சிற்றேட்டின் இன்னொரு பிரதி உங்களுக்கு தேவைப்பட்டால், தயவுசெய்து கேட்கவும்.